www.tamilarangam.net

# அந்த அவரின் அந்தமனத்திற்கான
# அன்புடையோரின்
# ஐந்தாண்டு நினைவலைகள்

****************

ஓ....

எம் இனிய தோழர்களே!
ஐந்து வருடங்களுக்கு முன் இதே காலப் பகுதியில்
நீங்கள் பதைபதைக்க, துடிதுடிக்க கண்ட துண்டமாக்கப்பட்டு
கொடூரமாக படுகுழியில் புதைக்கப்பட்டீர்கள்
யாருக்காக, ஏன், எதற்காக என்று கேட்டால்
ஒரே பதில் விடுதலை:



. சிவகுமாரன் (சிவா)
30-12-62
மூளாய்



த. புவீந்திரன் (புவி)
22-9-64
தொல்புரம்

சுந்தரத்தின் கோட்டையாம் சுழிபுரம்-கேவலம்
ஓர் இயக்கத்திலிருந்து ஆயுதத்துடன், பணத்தையும்
வாரிக்கொண்டு சென்ற துரோகி சுந்தரத்திற்கு
ஓர் கோட்டை-அதற்கு ஓர் கழகம்
கழகத்திற்கு ஓர் செயலதிபர் (பெரியைய்யா)
இதை விட இக்கும்பலுக்கு ஓர் உளவுப் படை
அதற்கும் ஓர் தலைவரும் சங்கிலியன்:



க. யோகீஸ்வரன் (ஈஸ்)
5-8-68
தொல்புரம்



சிவானந்தன்
(சின்ன சிவா)
21-8-64
மூளாய்

ஆம்..

27-11-82 ல் தேசிய விடுதலைப் போரில் முதலில்
உயிர்த்தியாகம் செய்த மாவீரன் சங்கரின்,
2வது நினைவுச் சுவரொட்டிகளுடன் சென்ற
ஆறு இளம் புலிகளை சங்கிலிக் கூட்டம் கடத்தி
கொடூர சித்திரவதையின் பின் புதைத்து மறைத்தது.

தமிழீழ மக்கள் விளையாட்டுக் கழகத்தின் சாதனைகள்;
ஆனைக்கோட்டையை அடித்துப்பார்த்தார்கள்-ம்..கும்..
நிக்கரவெட்டியாவை தட்டிப்பார்த்தார்கள்-அதேதான்
எல்லாவற்றிற்கும் மேலாக நன்றாக உண்டுறங்கிறார்கள்
ஆறு புலிகளை அழித்த சங்கிலியனும் சரிந்தான்-அவனது
கும்பல் தலைகளான செயலதிபர், வாசுதேவாவும் கைலாயம்
மிஞ்சினது கொஞ்சம், மாலைதீவு மண்ணைக் காக்கிறார்கள்.

அன்று உமாவின் கும்பல் வேசம் போட்டு-பின்பு
கூண்டோடு அழிந்தது, அதற்கிடையில் எத்தனையோ.
இன்று பெருமாள் கோஷ்டியும் அவர் தம் பரிவாரங்களும்
தாண்டவமாடுகின்றன. இது எத்தனை நாளைக்கு...





(இவர்களது உடல்கள் 9-12-84 அன்று
புதைகுழிகளிலிருந்து மீட்டுளடுக்கப்பட்டது)

சி. தேவநாதன் (தேவன்)
5-9-65
தொல்புரம்

சி. சிவராசா (சிவம்)
20-3-66
தொல்புரம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீரர்களே..

நீங்கள் எந்த திலீபன் அண்ணா மூலம்
புலிகள் பாசறையில் இணைந்தீரோ– அவரும்
உங்களிடமே வந்து விட்டார்.
உங்களுடன் 151 செல்வங்கள்–1984 ல்
தியாகி திலீபனுடன் 651 செல்வங்கள்–1987 ல்
இன்றோ 1303 செல்வங்கள்–1989 ல்
எத்தனை இடர்வரினும் அத்தனையும் முறியடித்து
தலைவர், தம்பி பிரபாவின் வழியில் தமிழீழம் காண
ஆயிரமாயிரம் புலிகள் தயாராக உள்ளனர்.

நண்பர்களே..

எம்முடன் ஒன்றாக படித்து, ஒன்றாகப் பழகி
மரணத்திலும் அறுவரும் ஒன்றாக சென்றீர்களே!
நீங்கள் வீரமரணத்தின் பின் சந்தனப் பெட்டியில்
உறங்கியவர்களல்ல, அலைகடலோரத்தின் மண்தரையில்
தமிழீழ பசுந்தரைக்கு உரமாகிப் போனவர்கள்
விடுதலைப் புனிதர்களை மக்களுக்கு தெளிவாக்கினீர்கள்
"புளொட்டின்" போலித்தனத்தையும் கலைத்தீர்கள்.

அன்று உரும்பிராயில் ஓர் தியாகி சிவகுமாரன்
இன்று மூளாயில் மீண்டும் ஓர் தியாகி சிவகுமாரன்
தமிழீழ புவிதனை மீட்க வந்த புவீந்திரன்
ஈஸ்வரனின் கும்பலை அடையாளம் காட்டிய யோகீஸ்வரன்
சிரித்த முகத்துடன் சிக்குட்டி என்ற சிவானந்தன்
தேன் தமிழின் தேமதுரத் தேவநாதன்
சின்னஞ்சிறு "சிவம்" என்ற சிவராசா

உங்களைப் போல் களத்தில் நின்று போராடாமல்
அகதியாய், அந்நிய மண்ணிலிருந்து அஞ்சலி செய்கிறோம்
வெட்கம் தான். ஆனால்..அதற்காக.. உங்களை,
நீங்கள் சென்ற பாதையை, உங்கள் சகோதரர்களை
கொச்சை செய்பவர்களை, மறக்கவோ, மன்னிக்கவோ மாட்டோம்.

நன்றி

ஆருயிர் நண்பர்கள்
யாழ்–தொல்புரம், மூளாய்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்